

# குடிமக்கள் காப்பியத்தில் அரசரும் மக்களும்

திரு. சு. ஏழுமலை
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
பச்சையப்பன் ஆடவர் கல்லூரி, காஞ்சிபுரம்.

தொன்மைத் தமிழரின் கலைச் சிறப்பிற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்வது சிலப்பதிகாரமாகும். இக்காப்பியம் "குடிமக்கள் காப்பியம்" என்ற தனிச்சிறப்பு முத்திரை பெற்ற நூலாகத் திகழ்வதாகும். சாத்தனாரின் உரைத்தாங்கு முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரிய செய்திகளும் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன. அவற்றைத் தொகுத்தும் வகுத்தும் வெளிப்படுத்துவதாகவே இக்கட்டுரை அமைகிறது.

## தோற்று வாயில்

சிலப்பதிகார காலத்தில் தமிழகத்தில் மக்கள் ஆட்சி இல்லை. மன்னர் ஆட்சி தான் நிலவியிருந்தது. மன்னர்களுக்கு எல்லா அதிகாரங்களும் உண்டு. ஆயினும் நீதி முறையுடன் ஆளும் மன்னர்கள் தான் மக்களால் மதிக்கப்பட்டனர். அறநெறி தவறாமல் ஆளவேண்டும். நாட்டு மக்களுக்கு எவ்வித இடையூறும் உண்டாகாமல் பாதுகாக்க வேண்டும். அவ்வாறு அரசாளும் மன்னர்களை மக்கள் அனைவரும் தெய்வம் என்றே போற்றி வந்தனர். அத்தகைய மன்னர்கள் தெய்வ நிலையின் அவதாரமாகவே மக்களால் மதிக்கப்பட்டனர் என்பது பண்டைக்கால மன்னர்களின் நிலைமை ஆகும். "அமைச்சு" என்ற அதிகாரத்தில் மன்னனைப் பற்றிக் கூறவரும் திருவள்ளுவர்,

> "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறை என்று வைக்கப்படும்"[1]

என்று விளக்கியிருப்பது இவண் ஒப்பு நோக்கத் தக்கது.

நீதிநெறி முறைகள் தவறாமல் குடிமக்களைக் காப்பாற்றும் மன்னனை, மக்கள் தெய்வமாகவே மதித்துப் போற்றுவார்கள் என்ற வள்ளுவர் கூறிய வழிமுறையில் தான் சிலப்பதிகாரத்தில் அரசியல் ஆட்சிமுறை அமைந்துள்ளது.

## மூவேந்தர்களின் வரலாறு

கண்ணகி நல்லாள் புகாரில் அமைதிப் பெண்ணாகத் தோன்றி, மதுரையில் வீரம் விளைத்து, வஞ்சியில் வானவர் வாழ்வு பெறுகிறாள். என மூவேந்தர்கள் போற்றும் சிலப்பதிகாரம் எனும் செந்தமிழ்ச் செழுநூல் வழி, புலப்படும் மூவேந்தர்களைப் பற்றி காண்போம்.

## சோழ வேந்தரின் வரலாறு

சோழன் ஆரியருக்கு முன் தென்னாட்டில் வாழ்ந்த “கருப்பு மனிதர்” என்னும் பொருளில் வழங்கும் “கால அல்லது கோல என்ற வடமொழிச் சொல்லில் இருந்தும் வந்தது என்பர் சிலர்.”[2] “சோளம் விளையும் நாடு சோள நாடு. அது சோழ நாடு என்று ஆயிற்று என்பர். சேரான் என்ற சொல்லில் இருந்து சோழன் என்ற சொல் வந்தது என்பர் வேறு சிலர்.”[3] சோழன் ஆட்சி காலத்தில் சோறு மடைப்பள்ளியாய் கிடந்தது அதனால், “சோழ நாடு சோறு உடைத்த நாடு” என்று புலவர்களால் பாடப்பெறலாயிற்று.

சோழ மன்னர் பரம்பரையில் ஒன்பது தாயாதிகள் இருந்தனர். அவர்கள் முடி மன்னனாகிய பேரிய சோழ அரசனுக்குக் கீழ் அடங்கி சிற்சில நாடுகளை அரசாண்டனர். ஆனால், அவர்கள் அடிக்கடி தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு இருந்தார்கள் என்று சங்க நூல் கூறுகிறது. கரிகாலச் சோழன் அரசுக் கட்டில் ஏறின போது, ஒன்பது தாயாதிகள் அவனுக்கு எதிராகக் கலகம் செய்து போரிட்டார்கள். அவர்களை எல்லாம் வென்று அடக்கிய பிறகு முடிசூடினான். அவ்வாறு முடிசூடிய பின் புகாரும், உறையூரும் தலைநகரங்களாகச் சிறப்புப் பெற்று இருந்தன என்பதை,

> **“சோழர் உறத்தை”** [4]
> **“சோழன் மூதூர்ப் போரச் சிறப்பின் புகார்”** [5]

என்னும் அடிகள் அறிவிக்கின்றன. அந்நகரங்களில் இருந்து சோழன் ஆட்சி செய்த சிறப்பினையும், பெருமையையும் சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது.

### பரிசளித்தல்

கரிகாலச் சோழப் பெருவளத்தான் ஆட்சிக் காலத்தில் கலையில் சிறந்த மாதவிக்கு “தலைக்கோல் அரிவை”என்னும் பட்டம் நல்கிப் பாராட்டினான். தலைக்கோல் அரிவை என்பது நன்மலையில் இருந்து கொண்டு வரப்பட்ட மூங்கில் ஆகும். அல்லது பகைவரிடமிருந்து பெற்ற வெண்குடைக் காம்பாகும். அது “ஏழுசாண்” நீளம் கொண்டது. அதன் ஒவ்வொரு கணுவிலும் நவமணிகள் பொருத்தப்பட்டு உள்ளன. எஞ்சிய பகுதியில் சம்புநாதம் என்னும் பொற் தகட்டினால் மூடப்பட்டு இருக்கும். மாதவிக்கு அளித்த தலைக்கோல் அரிவையானது பகைவரிடமிருந்து பெற்ற வெண் குடைக்காம்பாகும். மாதவியின் ஆடற்கலைக்காக அளித்தச் சிறப்புப் பட்டத்துடன் நினைவுப் பரிசாக 1008 கழஞ்சு பொன்னும் அளித்துச் சிறப்பித்தான் என்பதை,

> **“நூறுபத் தடுக்கி எட்டுக்கடை நிறுத்த**
> **வீறுயர் பசும்பொன் பெறுவதிம் மாலை”** [6]

என்னும் அடிகளால் அறியமுடிகிறது.

அன்று அரசன் மாதவிக்கு அளித்த 1008 பொற் கழஞ்சு என்பது இன்றைய மதிப்பில் 48,38,400 ரூபாய் ஆகும். அரசன் கலைக்கு அளித்த பெருந்தொகையை நினைக்கையில் இன்று கலை வல்லுநருக்கு அரசு கொடுக்கும் நினைவுப் பரிசும், பாராட்டும் அதிக தொகை ஒரு லட்சம் ரூபாய் ஆகும். அவற்றின் மதிப்பு பொற்கணக்கில் இருபது சவரன் ஆகும். அன்று அரசன் நல்கிய பொருளுக்கும், இன்று அரசு நல்கும் பொருளுக்கும், ஒப்புமைப் படுத்திப் பார்க்கையில் சோழன் அளித்த பரிசுத் தொகை 47 மடங்கு அதிகமாக

உள்ளது. ஆதலால், அன்றைய நாட்டு வளமும், இன்றைய நாட்டு நிலையும் கணிக்கையில் அன்று அளித்த மதிப்பு எண்ணுதற்கு அரியதாகும்.

### நகர் வலம் வருதல்

கடல் போன்ற பரந்த புகார் நகரில் சோழனின் செங்கோல் சிறந்த முறையில் இருந்தது. இரவு நேரத்தில் குடி மக்களின் நலனுக்காகவும், நாட்டின் பாதுகாவலாகவும், குடிகளில் களவு நேராதவாறும், மக்களின் நலன் பேணியே நல்லிரவில் அரசன் துஞ்சாது நகர் வலம் வந்தான். மக்கள் மன்னனைக் காப்பதைவிட மன்னன் மக்களைக் காப்பதே நல்லாட்சி ஆகும். அவ்வாறு குடிகளைக் கண்ணாகக் காத்து வருவது மன்னனின் கடமையாகும்.

**“இரவுத் தலைப்பெயரும் வைகறை காறும்**
**அரையிருள் யாமத்தும் பகலும் துஞ்சான்”** [7]

என்னும் அடிகளால் அரசனின் கடமையை அறிய முடிகிறது.

### சோழ நாட்டில் தொழில் வளர்ச்சிகள்

காவிரிப் பூம்பட்டினத்தில் மருவூர்ப் பாக்கத்தில் மக்களுக்காக பல்வேறு தொழில்களை மன்னர்கள் உருவாக்கினார்கள். பொன்செய்கொல்லர், மரம் கொல்தச்சர், கண்ணுள் வினைஞர் போன்ற கைத் தொழில் வல்லவர் இருந்தனர். பட்டிலும், பருத்தியிலும் நெசவு செய்வோர், சுதை வேலை செய்வோர், தையல்காரர் எனப் பல்வகை தொழிலாளர் கூடி வாழ்ந்தனர். கடற்கரைப் பகுதியில் மீன் பிடிப்போர், உப்பு விளைவிப்போர் வாழ்ந்தனர். மருத நிலத்தில் உழவர் உழுது பயிரிட்டு நெல் வளம் பெருக்கினர். கரும்பு வெட்டும் தொழிலும், வெல்லம் காய்ச்சும் தொழிலும் சிறந்து இருந்தது. முல்லை நிலத்தில் ஆயர்கள் பசுக்களைக் காத்து பால், தயிர் முதலியவற்றை உற்பத்தி செய்தனர். அதனால் சிலப்பதிகாரத்தில் கரிகாலனுடைய ஆட்சியைத் “தொழில் பெருகி இருந்த காலம்” என்பர்.

**“பட்டிலும், மயிரினும் பருத்தி நூலினும்**
**கட்டு நுண்வினைக் காருக்கர் இருக்கையும்”** [8]

**“பொன் செய் கொல்லரும் நன்கலந் தருநரும்**
**துன்ன காரரும் தோலின் துன்னரும்”** [9]

**“சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு”**[10]

என்பன தொழில் வளம் காட்டும் பாடல் பகுதிகள் ஆகும்.

### பாண்டிய வேந்தன் வரலாறு

“துஷ்யந்தன்” பேரனாகிய ஆசரிதன் புதல்வன் முதலாகப் பாண்டிய குலம் பரவிற்று என்பர். இந்திரன் சிவபூஜையால் புகழ் பெற்றான். அதனால், சிவனோ இந்திரனை நோக்கி “பாண்டிய நாட்டில் உள்ள கடம்பவனத்தை அழித்து நாடாக்கி நீ ஆள்க. உன்னிடம் மலையத்வஜன் என ஒரு புதல்வன் பிறப்பான். அவன் செய்யும் வேள்வியில் “உமை” மகளாகத் தோன்றுவாள். அவளை நாம் திருமணம் புரிவோம்” என்றனர். அவ்வகையில் இந்திரனே குலசேகரப் பாண்டியனாகப் பிறந்து அரசனானான். அவன்

வழி முதலாக பாண்டிய ஆட்சி முறை வளர்ந்து வந்தது".[11] அவ்வரசன் தோன்றிய குலம் சந்திர குலம் என்பர். இளங்கோ அடிகள்,

"திங்கள் செல்வம் திருக்குலம்" [12]

என்னும் பாடல் அடியால் அறியலாம்.

### பாண்டியனின் ஆட்சிச் சிறப்பு

தொன்மையான குமரி நாடு கடல் கோளால் அழிவுற்ற பின் குமரி ஆற்றின் பகுதிக்கும், தாமிரபரணி ஆற்றுக்கும் இடையில் தங்கி வாழ்ந்தவர்களுக்கு தலைநகரமாக இருந்தது கபாடபுரம் ஆகும். அப்பகுதியை ஆண்டவன் பாண்டிய நெடுஞ்செழியன். அவனின் ஆட்சியின் பெருமை எண்ணற்கரியது. குடிமக்கள் அரசனைப் போற்றிப் புகழ்ந்த பாங்கு வானளாவியது.

மன்னன் தன் உயிரைக் காட்டிலும், பிறர் உயிரை மேலாகக் கருதியவன். தொழில் வளத்தையும், கலைப் பண்பாட்டையும் குன்றாமல் நிலைக்கச் செய்தவன். சமய வேறுபாடின்றி பாதுகாத்தவன். வீரப்புரட்சி செய்த பெண்ணினறகுத் தன் செங்கோலைச் சாய்த்தவன். குடி மக்களின் குறை கண்டு தன்குல மரபையே கொடையாகத் தந்தவன்.

### செங்கோல் குறையா மன்னவன் புகழ்

அகத்தியன் வாழ்ந்த உயர்ந்த பொதிகை மலையை ஆட்சியாகக் கொண்டவன் பாண்டிய அரசன். அவன் பகைவரை வென்றவன். ஆநிரைகளை மீட்டு வெற்றி வாகை சூடியவன். மதுரையைச் சார்ந்த பெருங்காட்டுப் பகுதியில் கொடிய விலங்கினங்கள் வாழ்ந்தன. எனினும் அக்காட்டு வழியே செல்லும் குடிமக்களுக்கு எவ்வித இடையூறும் இல்லை. அவ்வாறு குடிமக்களுக்கு எத்துன்பமும் இல்லாது ஆட்சி செய்ததால் குடிகள் யாவும் அரசனை வாழ்த்திப் புகழ்ந்தனர்.

பாண்டிய மன்னன் எவரினும் தலைச்சிறந்தவன் அதனால், இவ்வுலகை "ஊழிக்காலம் வரை, அவனே ஆளவேண்டும் என்று மக்கள் கருதினர்". கடலை வென்றிடினும், கங்கை பாயும் இமய மலையைக் கைக்கொண்டு தென்திசையைப் பாண்டிய மன்னனே ஆளட்டும் என்று விரும்பினர். "செங்கோல் ஆட்சியே வேலியாக இருந்தும், மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பாக ஏற்று தன் கையை குறைத்து பொற்கையைச் சுமந்த வேந்தனே!" என்று மக்கள் அவன் பெருமையும், சிறப்பையும் விளம்பிய வண்ணம் இருந்தனர்.

"உடைத்தகை, குறைந்த செங்கோல் குறையாக் கொற்றத்து" [13]

"உருமும் சார்ந்தவர்க்கு உறுகண் செய்யா
செங்கோல் தென்னவன் காக்கும் நாடென" [14]

### பாண்டிய நாட்டினில் தொழில் வளர்ச்சிகள்

மதுரை நகரில் அங்காடி வீதிகள் தொழிலுக்கு ஏற்றவாறு தனித்தனிப் பிரிவுகளாக இருந்தன. அங்கு வண்டிகள், அதற்கு உண்டான பாகக் கருவிகள் விற்பனை செய்யப்பட்டன. வீர்ர்களுக்கான கவசம்,

அங்குசம், இடுப்பில் அணியும் பட்டிகை, தலையில் அணியும் குழியம், வெண் சாமரம், பல்வகையான கேடயங்கள், குத்துக் கோல்கள் இவையாவும் விற்பனை செய்யப்பட்டன.

செம்பு, முறி, உலோகங்கள், சங்கிலிகள், வெட்டும் கருவிகள், யானைத் தந்தங்களை கடைவதற்கான இயந்திரங்கள் விற்பனை செய்யப்பட்டன. பூவினால் புனைந்த பல்வகை மாலைகள், பல்வேறு விதமான பண்டங்கள், அரசனே காண விரும்பும் வகையில் அங்காடியில் குவிந்து கிடந்தன என்பதை,

**"வையமும் பாண்டிலும் மணித்தேர்க் கொடுஞ்சியும்**
**மெய்புகு கலசமும் வீழ்மணித் தோட்டியும்**
**அதன்புனை அரணும் அரியா யோகமும்**
**வளைதரு குழியமும் வால்வெண் கவாpயும்"** [15]

**"அரசு விழை திருவின் அங்காடி வீதியும்"** [16]

என்னும் அடிகள் விளக்குகின்றன.

## சேர வேந்தரின் வரலாறு

சேர நாடு பல பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டது ஆகும். மலை நாடு எனவும், கடல் மலை நாடு எனவும் இரு பிரிவுகளைக் கொண்டது. அதன் தலைநகரம் தற்காலத்து சேலம், கோயமுத்தூர் மாவட்டங்கள் அடங்கிய நிலப் பகுதியாகும். அதனைக் கொங்கு நாடு எனவும் கூறுவர். அங்கு தான் சேரர் தலைநகராகிய வஞ்சிமாநகர் இருந்தது. இந்நிலத்தே கொல்லிமலையும், ஆனை மலைத் தொடரும் உள்ளன. மலையாளம் எனப்படும் பகுதி கடல், மலை பரவிய நிலப்பரப்பைக் குறிக்கும் மலையாளத்தில் உள்ள கடற்கழிகள் மிக்க நாட்டினைக் "குட்ட நாடு" என்பார். பாலக்காட்டு வாயில் தொடங்கி தென் கன்னடம், குடகு வரையிலும் உள்ள பகுதி "குட நாடு" எனப்படும். பாலக்காட்டுக்கும், கொங்கு நாட்டுக்கும் இடைப்பட்ட பகுதி "பொறை நாடு" எனப்படும். இவையாவும் சேர நாட்டுப் பகுதிகளே ஆகும்.

மேற்குத் திசைக்குத் தலைவனானதால் சேர வேந்தன் "குடவர் கோமான்" எனப்பெயர் பெற்றான். அவை, "குட்டுவன், கொங்கன், கூழியன், பொறையன் முதலியனவும் சேரனின் பட்டப் பெயர்களாகும். அங்கு விரிந்து பரந்த சேர நாடு, உயர்ந்து ஓங்கிய குன்றுகள் பலவற்றை இடையிட்டுக் கிடந்ததால், ஒரே அரசினால் ஆள முடியவில்லை. அதனால், பல பகுதிகளும் பிரிவினைக்கு உள்ளாகின. அவற்றில் வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சேர மன்னன் பல அமைச்சர்களைக் கொண்டு நல்லாட்சி செய்தான். ஆனால், எக்காலத்தில் எவரால் யாரிடம் இருந்தது. யாரால் வெல்லப்பட்ட பகுதி என்ற செய்தி அறியக்கிடைத்திலர்" [17] என்பர்.

சேரன் ஆண்ட பகுதி - சேர நாடு பரந்திருந்த பகுதி பற்றியும், அந்நாட்டின் மன்னனும், ஆட்சியும் பற்றியும் தெளிவாக அறிந்து கொள்ளும் நமக்குச் சிலப்பதிகாரம் தோன்றிய காலத்திலோ, அதன் முன்னரோ சேர நாட்டின் பகுதிகளாக இந்நாடுகள் அமைந்து கிடந்தமை தெரிய வருகிறது. நாளடைவில் சேர நாடு விரிவடைந்த போது வென்று விரிந்த எல்லை காரணமாக இமயவரம்பன் முதலான பட்டப்பெயர்கள் மன்னருக்கு வந்திருத்தல் வேண்டும் என்பர்.

### அரசரைத் தெய்வமாகக் காணும் மரபு

'மன்னனே மக்களுக்கு உயிர்' என்பதும் 'மக்களே மன்னனுக்கு உயிர்' என்பதும் ஆகிய இருவேறு கருத்துகள் இலக்கியக் கொள்கையாக இருந்துள்ளன. இவற்றினும் மேம்பட்டு, தங்களைக் காத்துக் அரசாட்சி நடத்தும் மன்னனைக் கடவுளாகவே கருதும் பண்பும், நம்பிக்கையும், ஈடுபாடும், வழிபாட்டுத் தன்மையும் பழந்தமிழ் மக்களிடம் இருந்துள்ளது.

சிலம்பிலும் ஆய்ச்சியர் குரவை என்ற பகுதியில், ஆடிப்பாடும் ஆயர்குலத்துப் பெண்டிர் மன்னரைக் கடவுளாகவே போற்றித் துதித்துப் பாடியுள்ளனர். மூவேந்தரையுமே கண்ணனின் மறுபிறப்பாக - அவதாரமாகக் கருதிப் பாடியுள்ளனர்.

> "கோவா மலையாரம் கோத்த கடலாரம்
> தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே
> தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்து
> கோகுலம் மேய்த்துக் குருந்தொசித்தான் என்பரால்" [18]

என்னும் இவ்வரிகளின்படி, "கோக்கப்படாத ஆரமாகிய மலைச் சந்தனம், கோத்த ஆரமாகிய கடல் முத்து, இந்திரன் மார்பிலே பூண்டிருந்த மாலை இவைகள் பாண்டிய மன்னன் மார்பிலே உள்ளன" என ஆய்ச்சியர் குரவைக் கூத்தாடுவோர் பாண்டிய அரசனைப் போற்றியதாக இளங்கோ அடிகள் கூறுவர்.

### மணவிழாவுக்கு அரசர்கள் வருகை

'குடிமக்கள் காப்பியம்' என்ற கருத்தோட்டத்துக்கு ஆதரவாகச் சிலப்பதிகாரக் கதை வணிகக் குடியினருள் தலைசிறந்த ஒருவரது திருமண நிகழ்வுடன் தொடங்குகிறது. அரசனுக்கு இணையாக வைத்து எண்ணப்படும் ஏற்றம் மிக்க குடி அது. அத்தகு மேன்மையும் முதன்மையும் கருதி அரசனே அந்த மணவிழாவிற்கு வருவதற்கு இணையாக அவனது வெண்கொற்றக் குடை வந்தது என்கிறார் இளங்கோவடிகள்.

> "வெண்குடை அரசு எழுந்ததோர் படி எழுந்தன"[19]

என்பது அப்பகுதியாகும்.

இதன்வழி மக்களில் முதன்மை பெற்றச் சிலரது திருமணத் திருவிழாக்களில் மன்னரும் பங்குபெறும் பாங்கு, அக்காலத்தே நிலவியதை உணரமுடிகிறது.

### மக்களின் நாட்டுப் பற்று

சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் குடிமக்கள் மிகுந்த நாட்டுப்பற்றைக் கொண்டவர்கள் தங்களுடைய வாழ்வை மட்டும் கருதாமல், நாடு நன்றாக சிறந்து வாழ வேண்டும் என்னும் நாட்டம் உடையவர்கள். மறக்குடி மகளிர் புகாரில் நாளங்காடி பூதத்திற்குப் பலியிட்டு வணங்குகின்றனர். அவ்வேளையில் தனிப்பட்ட தங்கள் குறைகளைத் தீர்க்க வேண்டும் என்று அம்மக்கள் வேண்டிக் கொள்ளவில்லை. "சோழ மன்னர் ஆளும் பெரிய நாடு முழுவதும் வாழ வேண்டும், நாட்டில் பசிப் பிணி

ஒன்றும் வரக்கூடாது. மழையும் செல்வமும் பெருக வேண்டும்" 19 என்று வேண்டிக் கொள்கின்றனர். அதனை,

**"பெருநில மன்னன் இருநிலம் அடங்கலும்**
**பசியும், பிணியும், பகையும் நீங்கி**
**வசியும் வளனும் சுரக்க என வாழ்த்தி"** [20]

என வரும் சிலப்பதிகார அடிகளால் அறியலாம். தமிழ் மக்களின் தன்னலமற்ற நாட்டு நலம் எனும் பற்றை அறிய இது ஓர் சான்றாக அமைகிறது.

**மதிப்பளிக்கும் மாண்பு**

காட்சிக் காதையில் மலையக மக்கள் உரைத்த புதிய செய்திக்குச் சாத்தனார் வழி, விடை கண்ட செங்குட்டுவன், கோப்பெருந்தேவியிடம் பாண்டிய மாதேவி - கண்ணகி இருவரில் உயரியவர் யார்? என்று ஒரு வினாவை எழுப்பினான். அதற்கு அவனது தேவி வழங்கிய பதிலில் 'மாற்று தேசத்து மக்களையும் மதிக்கும்' மன்னர் குல மாண்பு புலப்படுத்துகிறது.

**"நம் அகனாடு அடைந்தவிப்**
**பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்"** [21]

என, தேவி கண்ணகியைப் போற்றி நிற்கும் திறம் குறிப்பிடத்தக்கது. தன்தேசம் விட்டு மற்றொரு தேசத்தில் அல்லலுற்று, நிறைவாகத் தம் தேசம் வந்த கண்ணகியை "அகல் நாடு அடைந்த பத்தினி" எனக் குறிப்பிட்டு அவளையே போற்ற வேண்டும் என்று சேரமாதேவி செய்த முடிவு சீரானது. சிறப்புற்றது. மதிப்பளித்துப் போற்றும் மன்னர் குல மாண்புக்கு ஒரு தனிச் சான்று.

**மக்கள் நலம் நாடும் மனப்பாங்கு**

கண்ணகி வழக்குரைத்த இடம், முற்றிலும் புதிய மன்னர் மாமன்றம். அங்கே புதியவனாகிய ஓர் பெயர் கூட அச்சமின்றி வழக்குரைக்க இருந்த வாய்ப்பு அக்காலத்தே மன்னன், மக்கள் குறை காட்டுவதில் காட்டிய ஈடுபாட்டைப் புலப்படுத்தி நிற்கிறது.

**"நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்**
**யாரையோ நீ மடக் கொடியோய்"** [22]

என்று வினவும் பாண்டியன் வழக்கைப் பதிவு செய்த போது கூட தன்மீது தவறு இல்லை என்ற தெளிவுடன்.

**"கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று**
**வேள்வேல் கொற்றம் காண்"** [23]

என்று விளக்கம் தருகிறார். இது ‘கொடியாரை வேந்து ஒறுத்தல் களை கட்டதனுடன் நேர்’ என்ற (குறள்-550) வழியும் ஆகும் எனினும் ஆராயாமல் செய்த தவறு மெய்ப்பிக்கப்பட்டு மன்னனின் உறுதி குலைந்தது. இத்தகு சூழல் வழி மன்னனது கடமை அல்லது மனத்தெளிவு, அவன் புதியவராக வந்தப் பெண்ணுக்கும் வாய்ப்பு அளித்தது. முறையிட்டு கேட்ட மக்கள் நல மனப்பாங்கு முதலியவற்றை வெளிப்படுத்தி நிற்கிறது.

### மற்ற உயிர்களுக்கும் மதிப்பளித்த மாண்பு

கண்ணகி ‘தேரா மன்னா’என விரித்துரைத்த உரை தேர்ச்சி மிக்கது. மன்னவர்கள் மக்களை மட்டுமின்றி மற்ற அஃறிணை உயிர்களை அவற்றின் உணர்வுகளை எவ்வண்ணம் போற்றி மதிப்பளித்தனர் என்பதைக் காட்டி நிற்கும் ஏற்றம் மிக்கது அவ்வுரை.

“எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத்தான்தன்
அரும்பெறல் புதல்வன் ஆழியின் மடித்தோன்” [24]

என வரும் அப்பாடல் பகுதி புறாவுக்கு உதவிய சிபிச் சக்கரவர்த்தி, கன்றுக்கு இரங்கிய காவலனாகிய மனுநீதி முதலானோர் வரலாறுகளை எடுத்துக்காட்டி மக்களுக்கு மட்டுமின்றி மற்ற உயிரினங்களுக்கும் மதிப்பளித்துக் காத்த சங்க கால மன்னரை மாண்பினை உணர்த்தி நிற்கிறது.

### நிறைவுரை

குடிமக்கள் காப்பியத்தில் அரசரும் மக்களும் உள்ளம் ஒத்திருந்தனர். மன்னரின் கொள்கைக்கு மக்கள் மாறுபாடின்றி வாழ்ந்தனர். மன்னரின் உயிரே மக்கள் தம் உயிராகக் கொண்டனர். மன்னர் தவறு செய்யினும் தட்டிக்கேட்கும் பாங்கினைப் பெற்றிருந்தனர். மக்களின் துன்பத்தில் மன்னர்களும் பங்கு கொண்டனர். குடிமக்களின் மீது மன்னர்கள் நம்பிக்கை கொண்டு ஆட்சி செய்ததால், மக்கள் நாட்டுப்பற்று உடையவர்களாக வாழ்ந்து வந்தனர்.

### அடிக்குறிப்புகள்

1. திருக்குறள் – இறைமாட்சி - 388
2. பாண்டிய வரலாறு – பக்கம் - 2
3. சங்க இலக்கியங்களில் வேந்தர் – பக்கம் - 39
4. சங்க இலக்கியம் புறநானூறு - பாடல் வரி – 69 - 12
5. சிலப்பதிகாரம் பதிகம், பாடல் வரி – 12 - 13
6. சிலப்பதிகாரம் – புகார்க்காண்டம் - அரங்கேற்று காதை - பாடல் வரி – 164 - 165
7. சிலப்பதிகாரம் – புகார்க்காண்டம் -அந்திமாலைச் சிறப்புச்செய் காதை - பாடல் வரி -80-81
8. சிலப்பதிகாரம் – புகார்க்காண்டம் - இந்திர விழா காதை - பாடல் வரி -16-17
9. மேற்படி – 31 - 32
10. மேற்படி - 38

11. அபிதான சிந்தாமணி – பக்கம் - 1076
12. சிலப்பதிகாரம் – மதுரைக்காண்டம் – காடுகாண்காதை - பாடல் வரி - 23
13. சிலப்பதிகாரம் – மதுரைக்காண்டம் - கட்டுரைக்காதை - பாடல் வரி – 51 - 52
14. சிலப்பதிகாரம் – மதுரைக்காண்டம் - புறஞ்சேரி இறுத்த காதை - பாடல் வரி – 8 - 9
15. சிலப்பதிகாரம் – மதுரைக்காண்டம் – ஊர்காண்காதை - பாடல் வரி – 168 - 171
16. மேற்படி - 179
17. சிலப்பதிகாரம் உரை - பக்கம் - 47
18. சிலப்பதிகாரம் – மதுரைக்காண்டம் - ஆய்ச்சியர்குரவை - உள்வாழ்த்து பாடல் வரி - 1
19. சிலப்பதிகாரம் - புகார்க்காண்டம் - மங்கல வாழ்த்துப்பாடல் வரி – 46 - 47
20. சிலப்பதிகாரம் – மதுரைக்காண்டம் - புறஞ்சேரி இறுத்த காதை - பாடல் வரி – 71 - 73
21. சிலப்பதிகாரம் – வஞ்சிக்காண்டம் - காட்சிக்காதை - பாடல் வரி – 113 - 114
22. சிலப்பதிகாரம் – மதுரைக்காண்டம் – வழக்குரைக்காதை - பாடல் வரி – 48 - 49
23. மேற்படி - 64-65
24. மேற்படி - 51-54

**utsmdu2@gmail.com**

# உலகத்தமிழ்

**உலகத் தமிழ்ச் சங்கம் வழங்கும் மின்னிதழ்**

((((((((((((((()))))))))))))))